# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1992/24 - 2016 නොවැම්බර් මස 09 වැනි බදාදා - 2016.11.09

*1992/24 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### *மாகாண சபை அறிவித்தல்கள்*

***ஊவா மாகாண மாகாண சபை***

*ஊவா மாகாண மாகாண சபையின் 2016 ஆம் ஆண்டின் ......... ஆம் இலக்க, ஊவா நவோதய நிதியத்தின் வரைவு யாப்பு*

*ஊவா மாகாண மாகாண சபையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள மேற்குறிப்பிடப்பட்டுள்ள வரைவு யாப்பு பொதுமக்கள் கருத்தை அறிந்து கொள்வதற்காக கீழே அறிவிக்கப்படுகிறது.*

*இந்த அறிவித்தல் அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 10 நாட்களின் பின்னர் இந்த வரைவு அனுமதிக்காக ஊவா மாகாண மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக ஏதாவது கருத்துக்களை முன்வைக்க விரும்பினால் இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டு 10 நாட்களுக்குள் அந்த கருத்துக்களை எழுத்து மூலம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு எனக்கு அனுப்பிவைக்க வேண்டும்.*


*சாமர சம்பத் தசநாயக்க,*
*ஊவா மாகாண முதலமைச்சர் மற்றும்*
*நிதி திட்டமிடல், சட்டம் ஒழுங்கு,*
*கல்வி, உள்ளூராட்சி, காணி, மின்சக்தி,*
*நிர்மாணத்துறை மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு*
*அமைச்சர்,*
*ஊவா மாகாண மாகாண சபை.*

*பிரதான அமைச்சர் காரியாலயம்,*
*இராஜ வீதி, பதுளை.*
*2016, ஒற்றோபர் 28.*


*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**ஊவா மாகாண மாகாண சபை**

*2016 ஆம் ஆண்டின் .... ஆம் இலக்க, ஊவா நவோதய நிதிய யாப்பு*

*ஊவா மாகாணத்தில் பல்கலைக்கழக நுழைவுக்கான தகமைகளை பெற்றுக்கொண்ட மற்றும் உயர்தர கல்வியை மேற்கொள்ள தகமைகளை கொண்டுள்ள திறமைமிக்க மாணவர்களின் கல்விக்கான நிதியுதவியை வழங்குதல் ஊவா மாகாண பாடசாலை மாணவர்களின் ஆரோக்கியத்தை உறுதி செய்வதற்கான வசதியை வழங்கவும் விளையாட்டு ஆற்றல்களை வெளிக்கொண்டு வருவதற்காக உதவியாக விளையாட்டுத் திறமைகளை வெளிக்காட்டும் மாணவர்களை மதிப்பீடு செய்தல் வசதிகளை வழங்குதல் பௌதிக அடிப்படை வசதிகளை வழங்குதல் மற்றும் இவற்றிற்கு தொடர்பான விடயங்களுக்கான ஏற்பாடுகளை வழங்கும் நோக்கத்துடன் 1992 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஊவா நவோதய நிதிய யாப்பு புதிதாக உருவாக்கப்படுவதற்கான யாப்பாகும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண மாகாண சபையினால் இவ்வாறு சட்டமாக்கப்படுகிறது :-*

*சுருக்கப் பெயர் மற்றும் அமுலாக் கப்படும் திகதி.*

*1. இந்த யாப்பு ஊவா மாகாண மாகாண சபையின் 2016 ஆம் ஆண்டின் ... ஆம் இலக்க ஊவா நவோதய நிதிய யாப்பு என அடையாளம் காணப்படுவதோடு ஊவா மாகாண ஆளுநரினால் அனுமதி வழங்கப்பட்ட தினத்திலிருந்து அமுலுக்கு வரும்.*

*ஊவா நவோதய நிதியத்தை நிறுவுதல்.*

*2. (1) இதன்பின்னர் ''நிதியம்'' என்று குறிப்பிடப்படும்) ஊவா நவோதய நிதியம் எனக் குறிப்பிடப்படும் நிதியம் ஒன்று நிறுவப்பட வேண்டும்.*

*(2) யாப்பின் (1) ஆவது பந்தியில் அதற்கு வழங்கப்பட்டுள்ள பெயருக்கு அமைவாக கூட்டுத்தாபனமாவதுடன் அதற்கு தொடர்ச்சியான இருப்பு மற்றும் முத்திரை ஒன்று இருக்க வேண்டும். மேலும் இப்பெயரில் நிதியத்தினால் வழக்கு தொடரவும் நிதியத்திற்கு எதிராக வழக்கு தொடரவும் முடியும்.*

*நிதியத்தின் நிருவாக சபை.*

*3. (1) நிதியத்தின் நிர்வாகம் முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு இதன் பின்னர் ஏற்பாடுகளுக்கமைவாக நிறுவப்பட்டுள்ள நிர்வாக சபையிடம் வழங்கப்பட வேண்டும்.*

*(2) இதன்பின்னர் ''சபை'' என்று குறிப்பிடப்படும்) நிதியத்தின் நிருவாக சபை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அங்கத்தவர்களை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.*

*(அ) முதலமைச்சர் ;*

*(ஆ) அமைச்சரவையின் கல்விக்குப் பொறுப்பான அமைச்சர் ;*

*(இ) பிரதான செயலாளர் ;*

*(ஈ) கல்வியமைச்சின் செயலாளர் ;*

*(உ) இந்த யாப்பு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் செயலாளர் ;*

*(ஊ) முதலமைச்சரினால் நியமிக்கப்படும் தமிழ், முஸ்லிம் இனத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் இருவர் ;*

*(எ) எதிர்க்கட்சித் தலைவர் அல்லது அவர் நியமிக்கும் பிரதிநிதி .*

*(3) முதலமைச்சர் சபையின் தலைவராக இருத்தல் வேண்டும்.*

*(4) இந்த யாப்புக்கு பொறுப்புடைய அமைச்சின் செயலாளர் சபையின் பதவி முறைப்பட்ட செயலாளராக இருத்தல் வேண்டும். செயலாளர் சபையின் பிரதான கணக்காளராகவும் இருத்தல் வேண்டும்.*

(5) சபையின் உறுப்பினர் ஒருவர் தலைவருக்கு கடிதம் ஒன்றை அனுப்புவதன் மூலம் எந்நேரத்திலும் தாமாகவே பதவியிலிருந்து விலகிக்கொள்ள முடியும்.

(6) ஒருவர் :-

அ) இலங்கை அல்லது வேறு நாடுகளில் செயற்படும் சட்டத்தின் கீழ் சொத்திழந்தவராக அல்லது வங்குரோத்து நிலையை அடைந்தவராக அறிவிக்கப்பட்டு விடுவிக்க முடியாத வங்குரோத்து நிலையை அடைந்த ஒருவராக இருந்தால் ;

(ஆ) நல்லொழுக்கத்திற்கு எதிரான நெறி பிறழ்வுகளுக்கு ஆறு மாதங்களுக்கு குறையாத சிறைத் தண்டனை வழங்கப்படக் கூடிய குற்றங்களை புரிந்தவராக இருந்தால் ;

(இ) இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்டத்தின் கீழ் புத்தி சுவாதினமற்ற அல்லது மனநலம் குறைந்தவாக இருந்தால் ;

அவ்வாறான ஒருவர் சபையின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு அல்லது உறுப்பினராக தொடர்ந்து செயற்படுவதற்கும் தகுதியற்றவராக கருதப்பட வேண்டும்.

(7). (5) மற்றும் (6) ஆவது பந்திகளில் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்ட ஒருவரின் பதவிக் காலம் மூன்று வருடங்களாகும்.

(8) தலைவரினால் எந்நேரத்திலும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரை காரணம் காட்டாமல் பதவியிலிருந்து விலக்க முடியும். ஏற்பட்ட வெற்றிடத்திற்கு புதிய பிரதிநிதி ஒருவரை முதலமைச்சரினால் நியமிக்க முடியும்.

(9) சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்ட ஒருவர் மரணமடைந்தால், பதவியிலிருந்து விலகினால் அல்லது பதவிக் காலம் முடிவுறும் முன்பாக வேறு காரணங்களுக்காக தனது பதவியை வெற்றிடமாக்கும் சந்தர்ப்பங்களில் உறுப்பினருக்கு பதிலாக நியமிக்கப்பட்டவர் முன்பு பதவியிலிருந்தவரின் முடிவுறாத காலம் வரை பதவியில் இருக்க முடியும்.

(10) சபையின் உறுப்பினர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் பெரும்பான்மை முடிவு பின்பற்ற அதிகாரம் உள்ளதாக கருதப்பட வேண்டும்.

(11) சபையின் உறுப்பினர்களுக்கிடையே வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ள காரணங்களுக்காகவே சபையின் எந்தவொரு செயற்பாடு மற்றும் வேலை அதிகாரமற்றதாக கருதப்பட கூடாது.

(12) சபையின் ஒரு கூட்டத்திற்கான குறை நிறைவெண் மூன்று உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.

(13) (9) ஆவது பந்தியில் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் சபையினால் அதன் கூட்டங்கள் மற்றும் கூட்டங்களின் செயற்பாடுகளை நடத்தி செல்வது தொடர்பாக அதன் செயற்படு முறைமைகள் ஒழுங்கமைக்கப்பட இயலும்.

(14) சபையின் கூட்டங்கள் தலைவரின் கட்டளைகளுக்கு அமைவாக அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை இடம்பெற வேண்டும்.

4. நிதியத்தின் குறிக்கோள்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைய வேண்டும் : நிதியத்தின் குறிக்கோள்கள்.

(அ) ஊவா மாகாணத்தில் பல்கலைக்கழக நுழைவுக்கான தகமைகளை பெற்றுக்கொண்ட மற்றும் உயர்தர கல்வியை மேற்கொள்ள தகமைகளை கொண்டுள்ள திறமைமிக்க மாணவர்களின் கல்விக்கான நிதியுதவியை வழங்குதல் மற்றும் பொருளுதவிகளை வழங்குதல் ;

(ஆ) கல்வியில் விசேட திறமைகளை வெளிப்படுத்தும் ஊவா மாகாண பிள்ளைகளை ஊக்கப்படுத்துவதற்காக அன்பளிப்புகளை வழங்குதல் ;

(இ) ஊவா மாகாண பாடசாலை மாணவர்களின் ஆரோக்கியத்தை உறுதி செய்வதற்காக சுத்தமான குடிநீரை வழங்கவும் குறிப்பிட்ட நோய்களிலிருந்து இச் சிறுவர்களை காப்பதற்கான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தல்;

(ஈ) மாவட்ட/மாகாண/தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட மட்டங்களில் விளையாட்டுத் திறமைகளை வெளிப்படுத்தும் ஊவா மாகாண மாணவர்களின் விளையாட்டு நுட்பங்களை மேம்படுத்துவதற்காக நிதியுதவிகளை வழங்குதல் மற்றும் புலமை பரிசில்களை வழங்குதல் ;

(உ) பொதுவாக பாடசாலை மாணவர்களின் மற்றும் விளையாட்டுக் கழக உறுப்பினர்களின் விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்துவதற்கு ஆதரவாக தற்போதுள்ள விளையாட்டு மைதானங்களின் அடிப்படை வசதிகள் மற்றும் பௌதீக தரங்களை மேம்படுத்தி அபிவிருத்தி செய்வதுடன் அவ்வாறான வசதிகளற்ற இடங்களில் புதிய விளையாட்டு மைதானங்கள் மற்றும் வசதிகளை செய்து கொடுத்தல் ;

நிதியத்தின் முத்திரை.

5. நிதியத்தின் முத்திரை :

(அ) சபையினால் ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட ஒருவரின் பாதுகாப்பில் இருக்க வேண்டும் ;

(ஆ) சபையினால் முடிவு செய்யப்படும் ஏதாவது ஒரு வகையில் மாற்றியமைக்கலாம் ;

(இ) சபையின் அதிகாரத்துடன் சபை உறுப்பினர்கள் இருவர் முன்னிலையில் தவிர வேறு எந்த ஆவணங்களிலும் கையெழுத்திடக் கூடாது மற்றும் அவ்விருவரும் தாங்கள் வருகை தந்தமைக்கு சாட்சியாக அந்த ஆவணத்தில் கையெழுத்திட வேண்டும்.

நிதியத்தின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள்.

6. (1) நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக தேவையான அல்லது தொடர்புடைய எல்லாவற்றையும் நிதியத்தின் பெயரில் செய்வதற்கு சபைக்கு அதிகாரமுள்ளது.

(2) (1) ஆவது உப பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு இழப்பு ஏற்படாத வகையில் சபைக்கு கீழ் குறிப்பிட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் கடமைகள் இருக்க வேண்டும்.

(அ) நிதி சேகரித்தல் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி ஆதாரங்களின் மூலம் பரிசில்கள் கொடைகள் மற்றும் அன்பளிப்புகளை பெற்றுக்கொள்ளல் ;

(ஆ) இந்த யாப்பின் கீழ் அல்லது விலைகொடுத்து வாங்குதல், அன்பளிப்புகள் , பரிசுகள், பரம்பரை ஒழுங்குமுறை மூலம் அல்லது வேறு வழிகளில் சபைக்கு ஒப்படைக்கப்படும் அசையும் அல்லது அசையா சொத்துக்களை கைப்பற்றிக் கொள்ள மற்றும் வைத்திருக்க நிதியத்திற்கு அதிகாரம் இருப்பதுடன் அவற்றை விற்க அடகு வைக்க வாடகைக்கு விட அன்பளிப்பு செய்ய ஒப்படைக்க விட்டுக்கொடுக்க மாற்றிக் கொள்ள அல்லது வேறு வழிகளில் அகற்றுதல் ;

(இ) நிதியத்தின் குறிக்கோள்களை முன்னேற்ற சீட்டிழுப்பு முறைகளை மேற்கொள்வது அல்லது தற்போது வழக்கத்தில் உள்ள சட்டங்களுக்கமைவாக நிதி சேகரித்தல் ;

(ஈ) நிதியத்தின் குறிக்கோள்களை கொண்டு செல்வதற்காக அதன் அதிகாரங்கள் பணிகள் மற்றும் கடமைகளை செயற்படுத்த மற்றும் நிறைவேற்ற தேவையான அனைத்து ஒப்பந்தங்கள் மற்றும் உடன்பாடுகளுக்கு நேராக அல்லது சபையின் மூலம் நியமித்த குழுவிற்காக எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் இல்லாத சமயத்தில் உப பிரதிநிதிகள் ஊடாக சென்று செயற்படுதல் ;

(உ) நிதியத்திற்கு சொந்தமான அல்லது நிதியத்தினால் உரிமை அனுபவிக்கப்படும் ஏதாவது ஓர் இடத்தில் கட்டிடம் அல்லது வடிவம் ஒன்றை உருவாக்குதல் அல்லது அதற்கு திட்டம் தீட்டுதல்;

(ஊ) 1992 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஊவா நவோதய நிதியத்தின் நிதி உள்ளடங்களான நிதியத்திற்கு சொந்தமான நிதியை சபையின் விருப்பத்துடன் நிதி முதலீடு செய்வதற்காக சட்டத்தின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஏதாவதொரு முதலீட்டில் முதலீடு செய்தல் மீள் முதலீடு செய்தல் அந்த முதலீட்டை மாற்றுதல் சபையின் விருப்பத்திற்கேற்ப இரத்து செய்தல் மற்றும் இந்த முதலீடுகள் மூலம் திரள்கின்ற வருமானங்களை சேகரித்தல் ;

(எ) சபையின் மூலம் அறிவிக்கப்படும் வங்கி அல்லது வங்கிகளில் நிதியத்தின் பெயரில் வங்கி கணக்குகளை ஆரம்பித்தல் மற்றும் மூடி விடுதல்.

7. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிதி ஆதரங்களின் மூலம் கிடைக்கப்பெறும் நிதி நிதியத்தில் வரவு வைக்கப்பட வேண்டும் : நிதியத்தின் அமைப்பு.

(அ) நிதியத்திற்காக ஊவா மாகாண சபையினால் வழங்கப்படும் உதவிகள் ;

(ஆ) தனிநபர் அல்லது அமைப்பு மூலம் வழங்கப்படும் நிதி அல்லது வேறு உதவிகள் அல்லது அன்பளிப்புகள் ;

(இ) சபையின் மூலம் ஏற்பாடு செய்யப்படும் சீட்டிழுப்பு மூலம் அல்லது களியாட்டங்கள் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய வருமானங்கள் ;

(ஈ) நிதி முதலீடுகள் மூலம் கிடைக்கப்பெறும் வட்டி அல்லது இலாபம் ;

(உ) வெளிநாட்டு நிதி ஆதாரங்கள் மூலம் கிடைக்கப்பெறும் உதவிகள், அன்பளிப்புகள் அல்லது நன்கொடைகள் ;

(ஊ) வேறு வழிகளில் நிதியத்திற்கு கிடைக்கப்பெறும் வரவுகள் ;

(எ) 1992 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஊவா நவோதய நிதியத்தின் நிதியை ஒன்றிணைப்பதன் மூலம்.

8. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள செலவுகள் நிதியத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் : நிதியத்தினால் செய்யப்படும் கொடுப்பனவுகள்.

(அ) நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான பணிகளுக்கு தேவையான நிதியத்தின் மூலம் அனுமதி அளிக்கப்பட்ட அனைத்து கொடுப்பனவுகள் ;

(ஆ) நிதியத்தை தோற்றுவித்து நடத்தி செல்ல மற்றும் செயற்படுத்த தேவையான செலவுகள் ;

9. (அ) சபையின் தேவைக்கேற்ப மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் கீழ் உள்ள அனைத்து அதிகாரிகள் மற்றும்/ அல்லது ஊழியர்கள் பிரதான செயலாளர் மற்றும் அந்த உத்தியோகத்தர்களின் விருப்பத்தின் பெயரில் நிதியத்தின் பணிகளுக்காக சபையினால் தீர்மானிக்கப்படும் கால எல்லைகளுக்கு சேவையில் ஈடுபடுத்திக்கொள்ள முடியும்.

(ஆ) அவ்வாறு இணைத்துக்கொள்ளப்படும் அதிகாரிகள் மற்றும்/அல்லது ஊழியர்கள் சபைக்காக சேவை செய்யும் காலப்பகுதி மாகாணசபைக்கு செய்யும் சேவையாக கருதப்பட வேண்டும்.

10. (1) சபையினால் அதன் வரவுகள் செலவுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மற்றும் நிதியத்தின் வேறு கொடுக்கல் வாங்கல்கள் கணக்கியல் தரங்களுக்கேற்ப இற்றைப்படுத்தப்பட்டு கொண்டு செல்லப்பட வேண்டும். கணக்கு மற்றும் கணக்காய்வு.

(2) சபையின் மூலம் ஒவ்வொரு வருடமும் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியின் போது கணக்கு புத்தகங்களின் மிகுதி கணக்கிடப்படுவதற்கு தயார்படுத்தப்பட்டிருக்க வேண்டியதுடன் அடுத்த வருடம் மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன்பதாக உரிய வருடத்திற்கான வரவு செலவு கணக்கு மற்றும் முன்னர் குறிப்பிட்ட திகதிக்கு தயாரிக்கப்பட வேண்டிய நிதியத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான கண்ணோட்டம் மற்றும் மிகுதி அறிக்கை அடங்கிய இறுதிக் கணக்கொன்றை தயாரிக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

(3) (2) ஆவது பந்திகளின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக 9 (அ) வாசகத்திற்கேற்ப ஊவா மாகாண சபையில் சேவையிலுள்ள கணக்காளர் ஒருவரின் உதவியை பெற்றுக்கொள்ள முடியும்.

(3) தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதன் ஊடாக சபையின் மூலம் நிமித்தங்களுக்காக அதிகாரம் வழங்கப்பட்ட சபையின் உறுப்பினர்கள் இருவரினால் வரவு செலவு கணக்குகள் மற்றும் மிகுதி அறிக்கை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(4) அரசியல் அமைப்பின் 154 ஆம் சட்டத்திற்கு அமைவாக ஒவ்வொரு வருடமும் நிதியத்தின் கணக்குகள் கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும்.

*நிதியத்தின் நிதி ஆண்டு.*

*11.* நிதியத்தின் நிதி ஆண்டு பஞ்சாங்க (நாட்காட்டி) ஆண்டாக வேண்டும்.

*செலவுகளை ஈடுசெய்தல்.*

*12.* (1) நீதிமன்றத்தின் முன்னால் நிதியத்தினால் அல்லது நிதியத்திற்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகள் தொடர்பாக செலவுகள் ஏற்படுமாயின் அச்செலவுகள் நிதியத்தினால் வழங்கப்பட வேண்டும்.

*நிதியத்தின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் குற்றவியல் சட்டக் கோவையின் கீழ் அரச ஊழியர்களாக கருதப்பட வேண்டும்.*

*13.* நிதியத்தின் அனைத்து அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் குற்றவியல் சட்டக்கோவையின் அர்த்தங்களுக்கமைய மற்றும் அதன் செயற்பாடுகளுக்காக அரச ஊழியர்களாக கருதப்பட வேண்டும்.

*நிதியம் இலஞ்ச சட்டத்தின் அர்த்தங்களுக்கமைவாக அட்டவணையிடப்பட்ட நிறுவனமாக கருதப்பட வேண்டும்.*

*14.* நிதியம் இலஞ்ச சட்டத்தின் அர்த்தங்களுக்கமைய அட்டவணையிடப்பட்ட நிறுவனமாக கருதப்படுவதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கமைவாக பிரயோகித்துக் கொள்ளப்பட வேண்டும்.

*15.* இந்த யாப்பு நடைமுறைப்படுத்தப்படும் நாள் முதல் 1992 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஊவா நவோதய நிதிய யாப்பு மாற்றியமைக்கப்படுவதுடன் இதுநாள் வரை 1992 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க யாப்பின் மூலம் செயற்படுத்தப்பட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் பாரபட்சம் ஏற்படாத வகையில் அவை இந்த யாப்பின் மூலம் செயற்படுத்தப்படும் என கருத்தில் கொள்ள வேண்டும்.

*முரண்பாடுகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழிச் சொற்றொடர்களே நடைமுறையில் உள்ளதாக கருதப்பட வேண்டும்.*

*16.* இந்த யாப்பின் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் முரண்பாடுகள் ஏற்படும் போது, சிங்கள மொழிச் சொற்றொடர்கள் சரியானதென கருதப்பட வேண்டும்.

*பொருள் விளக்கம்.*

*17.* சொற்றொடர்கள் தொடர்பாக பொருள் விளக்கம் தேவைப்படும் பட்சத்தில் இந்த யாப்பில் :-

முதலமைச்சர் என குறிப்பிடப்படுவது ஊவா மாகாண சபையின் முதலமைச்சர்.

அமைச்சரவையின் கல்வி அமைச்சர் என குறிப்பிடப்படுவது ஊவா மாகாண அமைச்சரவையின் கல்வி அமைச்சர்.

பிரதான செயலாளர் என குறிப்பிடப்படுவது ஊவா மாகாண பிரதான செயலாளர்.

கல்வி அமைச்சின் செயலளார் என குறிப்பிடப்படுவது ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்.

இந்த யாப்பில் விடயத்திற்கு பொறுப்பான செயலாளர் என குறிப்பிடப்படுவது யாப்பின் நிர்வாக சபையின் நிதியத்தின் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் நிறுவனத்தின் செயலாளர் ஆகும்.

11- 1090

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.